07-10-2012 Dinakaran



அரும்பாக்கம் எம்எம்டிஏ காலனி 100 அடி சாலையில், மெட்ரோ ரயிலுக்கான மேம்பாலங்களில் இருவழி தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு, மின்கம்பிகள் பொருத்தும் பணி தொடங்க உள்ளது.

### மெட்ரோ ரயில் வந்து செல்வதற்காக

# சென்ட்ரலில் இரண்டு அடுக்கு ரயில் நிலையம்

## நேரு பூங்காவில் விரைவில் 2வது சுரங்க பணி

**சென்னை, அக். 7:** மெட்ரோ ரயில் வந்து செல்வதற்காக சென்ட்ரலில் பூமிக்கு அடியில் 92 அடி ஆழத்தில் இரண்டு அடுக்கு ரயில் நிலையம் அமைக்கப்படுகிறது. நேரு பூங்காவில் விரைவில் 2வது சுரங்கம் தோண்டும் பணி தொடங்க உள்ளது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க மெட்ரோ ரயில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை ஒரு வழித்தடத்திலும், சென்ட்ரலில் இருந்து புனித தோமையர் மலை வரை 2வது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 45 கி.மீ. தூரத்தில் 24 கி.மீ. தூரம் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதையிலும், 21 கி.மீ. தூரம் உயர்த்தப்பட்ட (மேம்பாலம்) பாதையிலும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



இரண்டு வழித்தடங்களிலும் உள்ள 32 ரயில் நிலையங்களில் 19 பூமிக்கு அடியில் அமைக்கப்படுகிறது. நேரு பூங்காவில் கடந்த ஜூலை மாதம் சுரங்கம் தோண்டும் பணி தொடங்கியது. இதுவரை 85 மீட்டர் நீளத்துக்கு தோண்டி முடிக்கப்பட்டுள்ளது. 100 மீட்டர் தோண்டி முடிந்ததும், நேரு பூங்காவில் இருந்து எழும்பூர் வரை பூமிக்கு அடியில் 2வது சுரங்கப் பாதை தோண்டும் பணி தொடங்கப்படும். அது போன்று வண்ணாரப்பேட்டை, மே தின பூங்கா பகுதியில் டனல் போரிங் மிஷின் சுரங்கம் தோண்ட தயாராக உள்ளது. இந்த மாதத்திற்குள் அங்கும் சுரங்கம் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

ஆலந்தூர் ரயில் நிலையத்தில் உயர்த்தப்பட்ட பாதையில் இரண்டு வழித்தடத்தில் இருந்தும் மெட்ரோ ரயில் வந்து செல்வதால் இரண்டு மாடி ரயில் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. சென்ட்ரல் நிலையத்தில் இருந்து ஒரு ரயில் புனித தோமையர் மலை வரை செல்கிறது. வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை செல்லும் ரயிலும், சென்ட்ரல் ரயில் நிலையம் வழியாக செல்வதால் அங்கு பூமிக்கு அடியில் 28 மீட்டர் ஆழத்துக்கு (92 அடி) பள்ளம் தோண்டப்பட்டு வருகிறது.

சென்ட்ரலில் இரண்டு அடுக்கு ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் சோமசுந்தரம் கூறினார்.

### கூவத்துக்கு கீழே 82 அடியில் ரயில்

சென்ட்ரலில் இருந்து புதிய தலைமை செயலகம் வரை மெட்ரோ பாதையின் குறுக்கே கூவம் ஆறு உள்ளது. இந்த பகுதியில் கூவத்துக்கு கீழ் 25 மீட்டர் (82 அடி) ஆழத்தில் சுரங்கம் தோண்டப்படுகிறது. கூவத்துக்கு கீழ் 82 அடியில் பாறைகள் அதிகளவில் உள்ளதால் அந்த பகுதியில் மிகவும் மெதுவாக சுரங்கம் தோண்ட மெட்ரோ ரயில் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். மெட்ரோ ரயில் பணிக்காக குறைந்தபட்சம் 17 மீட்டரும் (56 அடி), அதிகபட்சமாக 28 மீட்டரும் (92 அடி) பள்ளம் தோண்டப்படுகிறது.